(ஆ) ஆம் எனில், எப்பொழுது கட்டிடம் கட்டப்படும்?

விடை–

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை *அமைச்சர்:*

(அ) ஆம்.

(ஆ) விரைவில் கட்டப்படும்.

363–

கிண்டி அருகில் மருத்துவமனை, சுகாதார நிலையம் ஏற்படுத்துதல்

***21305–** திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்:

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா–

சென்னை, கிண்டிக்கு அருகிலுள்ள உள்ளகரம், புழுதிவாக்கம் ஆகிய இடங்களில் அரசு மருத்துவமனையோ, சுகாதார நிலையமோ ஏற்படுத்த அரசு முன்வருமா?

விடை–

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி, மக்கள் நல்வாழ்வுத் துறை *அமைச்சர்:* தற்சமயம் கருத்துரு எதுவும் பரிசீலனையில் இல்லை.

(ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்.

(ஒன்பதாம் பட்டியல்)

1–

கோயம்புத்தூர் கெம்பட்டி காலனியில் வீட்டுமனைப் பட்டா வழங்குதல்

வினா எண் **5018–**திரு. கே. செல்வராஜ்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா–

(அ) கோயம்புத்தூர் மேற்குப்பகுதி கெம்பட்டி காலனியிலுள்ள வீடுகளுக்கு, குடிசைகளுக்கு பட்டா கொடுக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை–

மாண்புமிகு திரு. எஸ்.டி. சோமசுந்தரம், வருவாய்த் துறை *அமைச்சர்:*